CH/6/1/7/6 2017.02.

…………………………………
…………………………………
…………………………………

**<u>அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் - 2017</u>**

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டில் பிரதான பங்களிப்பினை வழங்கும் அரச ஊழியர்களின் ஆக்கத் திறன்களை வெளிக்கொணருதல் மற்றும் அவற்றினை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழக்கும் பொருட்டு கலாசார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்ச்சியாக அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத் திறன் போட்டியானது இவ் வருடமும் நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. இதற்கேற்ப, இப் போட்டித்தொடர் தொடர்பான விபரங்களுடனான சுற்று நிருபக் கடிதம் மற்றும் சுவரொட்டி என்பன இத்துடன் அனுப்புகின்றேன். இப் போட்டித் தொடர் தொடர்பாக உங்களது நிறுவனத்தில் மற்றும் அதன் இணை நிறுவனங்களின் பதவியணியினரை அறிவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**டீ.சுவர்ணபால**
செயலாளர்
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சு.

CH/6/1/7/6 2017.02.

…………………………………

…………………………………

**<u>அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் – 2017</u>**

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருப்போரின் ஆக்கத் திறன்கனை வெளிப்படுத்தல் ஊடாக அவர்களின் திறமைகள் பாராட்டப்படுவதால் வினைத்திறனுடனான மற்றும் சக்திவாய்ந்த ஒரு அரச சேவையினை கட்டியெழுப்புவதை கருத்தில்கொண்டு அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் நடாத்தப்படுகின்றது.

சிறுகதை, சிறுவராக்கம். பாடலாக்கம், கவிதையாக்கம், குறு நாடகம் மற்றும் ஓவியம் என ஆறு துறைகள் உட்படும் வகையிலும் தமிழ் மற்றும் சிங்களம் என்னும் இரு மொழிகள் மூலமாகவும் நடாத்தப்படும் இப் போட்டித்தொடர் தொடர்பான நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

## பொது நிபந்தனைகள்

- அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பெற முடியும். (உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் மற்றும் அதன் கீழ் செயற்படும் நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் இப் போட்டிக்காக ஆக்கங்களை முன்வைக்க முடியாது)
- சிறுகதை, பாடலாக்கம், கவிதையாக்கம், குறு நாடக கைப்பிரதிகள் A4 அளவிலான தாளின் தனிப்பக்கத்தில் தெளிவான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது தட்டச்சுப் பிரதியாகவோ சமர்ப்பிக்க முடியும்.
- போட்டியாளர் ஒருவர் ஒவ்வொரு பிரிவின் கீழும் ஓர் ஆக்கம் என்ற வகையில் எல்லாமாக 3 ஆக்கங்களை மட்டும் முன்வைக்க முடியும்.
- ஒவ்வொரு ஆக்கத்திற்கும் வெவ்வேறாக விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் படி தயார் செய்யப்பட்ட விண்ணப்பத்தை முறையாக பூரணப்படுத்தி நிறுவன தலைவரின் சான்றுடன் ஆக்கங்களை முன்வைத்தல் வேண்டும். ***நிறுவன தலைவரது சான்றின்றிய (கையொப்பம் மற்றும் பதவி முத்திரை)ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.***

- ❖ அனைத்து ஆக்கங்களும் சுய ஆக்கங்களாகவே இருக்க வேண்டியதுடன் மொழிபெயர்தல்களாகவோ தழுவல்களாகவோ இருத்தல் கூடாது.
- ❖ விண்ணப்பப் பத்திரத்தைதவிர **ஆக்கத்தில் போட்டியாளர் தொடர்பான எத்தகைய தகவல்களும் குறித்தல் கூடாது.** அவ்வாறாக குறித்திருக்கும் ஆக்கங்கள் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படும்.
- ❖ இந்தப் போட்டியில் முன்பு மூன்று தடவைகள் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் மீண்டும் பங்குபற்ற முடியாது.

மேற்படி நிபந்தனைகளை தவிர்த்து முன்வைக்கின்ற ஆக்கங்கள் மதிப்பீடுக்காக பொறுப்பேற்கப்படமாட்டாது. அனுப்பப்படும் சிறுவர் ஆக்கம் மற்றும் சித்திர ஆக்கம் விருது வழங்கும் விழாவிற்குப் பின்னர் அதே வருடத்திற்குள் திரும்பவும் பெற்றுக் கொள்ள முடியும்.

## போட்டி நிபந்தனைகள்

★ **சிறுகதை**

ஆகக் கூடியது 2000 சொற்களுக்கு மேற்படாது இருப்பதுடன் கணணிப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

★ **பாடல்**

இதற்கான காலப்பகுதி 3½ நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

★ **கவிதை**

ஆகக் கூடியது பத்து செய்யுள் பகுதிகளை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

★ **சிறுவர் ஆக்கம்** (சிறு பிள்ளைகளுக்கான இலக்கிய ஆக்கம்)

- இது சிறுவர் கதையாகவோ அல்லது சிறுவர் பாடலாகவோ அதற்குரிய சித்திரங்களுடன் எழுதப்படல் வேண்டும்.
- 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் பொருத்தமான விடயத்தை இலகுவான மொழிநடையில் எழுதுதல் வேண்டும்.
- 5 - 7 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான ஆக்கம் 16 பக்கங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். 8 – 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான ஆக்கம் 16 பக்கங்களுக்கு மேற்பட்டதாகவும் 32 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்கள் A4 அளவிலான தாளின் தனிப்பக்கத்தில் வர்ணப் படங்களுடன் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

★ **ஓவியம்**

- கலாசார ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் ஓவியங்களை தீட்ட வேண்டும்.
- விரும்பிய மேற்பரப்பலகில் விரும்பியதை உபயோகித்து ஓவியங்களை தீட்ட முடியும்.
- ஓவியம், 18″ x 14″ பரிமாணமுடையதாக இருத்தல் வேண்டும்.

★ **குறு நாடகம்**

- இணைப்பு 01 இல் உள்ளது.

**போட்டி முடிவு**

- இப் போட்டியின் முடிவானது சிங்களத்திலும் தமிழிலும் தனித்தனியாக தத்தம் துறைகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற கல்விமான்களைக் கொண்ட ஒரு சபையினால் தீர்மானிக்கப்படும்.
- ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 2016 மே மாதம் 31 ஆம் திகதி முன்பு **செயலாளர், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 8 ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை.** என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் – 2017"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
- மேலதிக தகவல்களுக்கு **www.cultural.gov.lk என்ற** இணையத்தள முகவரி ஊடாகவோ அல்லது **0112877120 / 011-2872001** என்ற தொலைபேசி இலக்கங்கள் வழியாகயாகவோ தொடர்பு கொள்ளவும்.

**டீ.சுவர்ணபால**
செயலாளர்
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சு.

| | | |
|---|---|---|
| **அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர்– 2017** | | |
| **படைப்பாளரின் தனிப்பட்ட தகவல்கள்** | | |
| 01 | முழுப் பெயர் | |
| 02 | தனிப்பட்ட முகவரி | |
| 03 | தொலைபேசி இலக்கம் :-<br>கையடக்கத் தொ.பே.இல.: | |
| **நிறுவனம்சார் தகவல்கள்** | | |
| 01 | நிறுவனம் | |
| 02 | நிறுவனம் அமைந்துள்ள மாகாணம் | |
| 03 | மாவட்டம் | |
| 04 | அலுவலக முகவரி | |
| 05 | அலுவலக தொலைபேசி இல. | |
| 06 | பதவி | |
| **ஆக்கம் தொடர்பான விபரங்கள்** | | |
| 01 | விண்ணப்பதாரியின் பெயர் | |
| 02 | மோழி மூலம் | சிங்களம் / தமிழ் |
| 03 | ஆக்கத்தின் பெயர் (தலைப்பு) | |
| 04 | போட்டிப் பிரிவு | சிறுகதை / சிறுவர்கதை / பாடல் / கவிதை / சித்திரம் |

வெற்றிபெறும் ஆக்கங்களை உள்ளடக்கி அமைச்சினால் வெளியிடப்படும் நூலில் எனது ஆக்கத்தினையும் உள்ளடக்குவதற்கு எனது அனுமதியை வழங்குகின்றேன் / வழங்கவில்லை.

………………………… ………………………………….
திகதி கையொப்பம்

**நிறுவன தலைவரின் விதந்துரைப்பு**

**இந் நிறுவனத்தில் சேவையாற்றும் திரு. /திருமதி / செல்வி ……………………………………… அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள சிறுகதை / சிறுவராக்கம் / பாடல் / கவிதை / குறுநாடகம் / ஓவியம் இவரது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.**

**……………………… …………………………………..**
**திகதி திணைக்கள தலைவரின் கையொப்பம்**

**அலுவலக முத்திரை**

## அரச ஊழியர்களுக்கிடையிலான குறு நாடக ஆக்கப் போட்டி – 2017

### போட்டி விதிமுறைகள்

1. இப்போட்டிகளில் அரச சேவை, மாகாண அரச சேவை, அரச சார்புடைய நிறுவனங்களில் நிரந்தர சம்பள திட்டத்திற்கு உரித்தான பதவிநிலை ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் பங்குபற்றலாம்.
2. எனினும் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் அல்லது அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களில் சேவை புரியும் ஊழியர்கள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் ஊழியர்கள் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.
3. நாடகத்தின் மேடை வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, நடன ஒளியமைப்பு, இசை மற்றும் முக ஒப்பனை போன்றவற்றிற்கு மாத்திரம் அரச ஊழியர்கள் அல்லாதோரை இணைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன் அவர் விருது கிடைப்பதற்கு உரித்துடையவர் அல்ல. அரச ஊழியராக இருந்தால் மட்டும் விருது வழங்கப்படும்.
4. இப்போட்டியில் பங்குபற்ற உரித்துடையாதோர் எவரேனும் தமது நாடகத்தில் பங்குபற்றாமல் இருப்பதற்கு போட்டிக்கு சமர்ப்பிக்கும் நாடகத்தின் இயக்குநர் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறான நபர் நாடகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இனங்கண்டு கொள்ளப்படுமாயின் அந்நாடகத்தை முழுமையாக போட்டியில் இருந்து நீக்க அமைச்சின் செயலாளருக்கு அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தருக்கு அதிகாரம் உள்ளது.
5. போட்டிகளில் பங்குபற்றுகின்ற அனைத்து போட்டியாளர்களும் இறுதிச் சுற்றில் பங்குபற்றும் போது,
   - 5.1 தாம் அரச சேவையில் நிரந்தர சம்பளம் பெறும் பதவியொன்றில் சேவைபுரிவதாக தமது நிறுவன தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - 5.2 தேசிய அடையாள அட்டையின் பிரதியினை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
   - 5.3 கடைமை புரியும் நிறுவனத்தின் அடையாள அட்டையினை கேட்கும் போது அதனை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
6. இப்போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் சுற்றுநிருபத்திற்கு அமைய தனக்குரிய தகுதியினை நிரூபிப்பது போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து போட்டியாளர்களதும் பொறுப்பாவதுடன் உரிய தகவல்களை கேட்கும் போது சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். அமைச்சின் செயலாளர் அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் திருப்தி தரும் வகையில் அத்தகவல்கள் வழங்கப்படாதவிடத்து முழு நாடகமும் போட்டியில் இருந்து நீக்குவதற்கு ஏதுவாக இருக்கும்.
   - 6.1 போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் நாடகம் தமது சுய ஆக்கமாக இருத்தல் வேண்டியதுடன் அரங்கேற்றப்படும் காலம் 25 தெடக்கம் 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.
   - 6.2 2017 ஆம் ஆண்டிற்கு முந்திய வருடங்களில் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் குறுநாடக போட்டிகளுக்காக மேடை ஏற்றப்பட்ட ஆக்கமாக இருத்தல் கூடாது.
   - 6.3 முழு நடிப்பும் பொதுவாக எந்தவொரு நபரும் இரசிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. இறுதிச்சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படும் நாடகங்கள் மேடை ஏற்றுவதற்கு முன்பாக பொது அவைக்காற்றுகை சபையின் அங்கிகாரத்தினை கட்டாயமாக பெற வேண்டியுள்ளதுடன் போட்டி நடைபெறும் தினத்தில் அதன் பிரதியினை அமைச்சிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அந்நாடகம் போட்டியில் இருந்து நீக்கப்படும்.
8. ஒரு போட்டியாளருக்கு எந்தவொரு துணைப்பிரிவிலும் ஒரு நாடகத்தில் மட்டும் பங்குபற்ற முடியும்.
9. ஒரு நாடகத்திற்கான கதாபாத்திரங்கள் அனைத்தும் ஒரு நிறுவனத்தில் இருந்தே தெரிவு செய்ய வேண்டிய அவசியமில்லாததுடன் ஏனைய அரச நிறுவனங்களில் பணிபுரிபவர்களையும் இணைத்துக் கொள்ள முடியும். எனினும் கடிதமூலமான தொடர்புகள் நாடக தயாரிப்பாளரது நிறுவனத்துடனேயே மேற்கொள்ளப்படும்.

**போட்டி நடைபெறும் முறை மற்றும் புள்ளி வழங்கல் முறை**

10. போட்டிகளுக்காக பிரதிகளை கோருதல் நாடளாவிய ரீதியில் நடைபெறுவதுடன் சமர்ப்பிக்கப்படும் கைப்பிரதிகளை ஆய்வு செய்த பின் மேடை ஏற்றுவதற்கு தகுதியான பிரதிகள் தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிகள் மாத்திரம் முதலாவது சுற்றிற்காக சமர்ப்பிக்கப்படும்.

11. முதலாவது சுற்றில் மேடையேற்றப்படும் நாடகங்களில் நடுவர்களினால் இறுதி சுற்றிற்கு சமர்ப்பிப்பதற்காக பரிந்துரை செய்யும் நாடகங்கள் இறுதி சுற்றிற்காக தேர்ந்தெடுக்கப்படும். அவ் எண்ணிக்கை ஆறினை விட அதிகம் எனின் புள்ளிகளின் அடிப்படையில் ஆறு நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

12. நாடகத்தின் மேடை வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, நாடக ஒழுங்கமைப்பு, மேடை நிர்வாகம், ஒளியமைப்பு, இசை, நடிப்பு, கையெழுத்துப் பிரதி, முக ஒப்பனை மற்றும் தயாரிப்பு போன்ற பகுதிகள் புள்ளி வழங்கலின்போது கருத்தில் கொள்ளப்படும்.

13. முதலாவது சுற்றில் புள்ளி வழங்கும்போது முகஒப்பனை மற்றும் ஒளியமைப்புத் தவிர மேற்படி அனைத்துப் பகுதிகளும் கருத்தில் கொள்ளப்படுவதுடன் இறுதிச் சுற்றில் இல.10 இன் கீழ் உள்ள அனைத்துப் பகுதிகளும் புள்ளி வழங்கும்போது கருத்தில் கொள்ளப்படும்.

14. அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் குறுநாடக போட்டிகளில் ஏதேனும் வதிமுறைகள் மீறப்படல் தொடர்பாகவோ அல்லது போட்டிகளில் இடம்பெற்ற ஏதேனும் முறைக்கேடு தொடர்பாகவோ முறைபாடு இருப்பின் குறிப்பிட்ட நாடகப் போட்டி நடைபெற்று மூன்று நாட்களுக்குள் முறையிட வேண்டியதுடன் பெறுபேறு வெளியாகியபின் செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15. மேற்படி 14 இல் குறிப்பிட்டதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பொதுவான தன்மையாகவும் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் விருது வழங்கிய பின்னும் குறிபிட்ட நாடகத்தினை முழுமையாக நீக்குவதற்கும் வழங்கப்பட்ட விருதுகள், பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் செயலாளருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தருக்கு அதிகாரம் உள்ளது.

**போட்டிக்கு விண்ணப்பித்தல்**

16. போட்டிகளுக்காக கைப்பிரதிகளை சமர்ப்பிக்கும் போது அதனை நாடகத்தின் இயக்குநரினால் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கீழ்காணும் முறையில் செயல்படல் வேண்டும்.

16.1 விண்ணப்பப் படிவங்கள் தாங்கள் சேவைபுரியும் நிறுவனத்தின் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் அனுபுதல் வேண்டும்.

16.2 ஆக்கங்களை **2017.04.31** ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

16.3 அனைத்து குறுநாடகப் பிரதிகளும் 3 பிரதிகளைக் கொண்டதாக அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத ஆக்கங்கள் போட்டியில் இருந்து விலக்கப்படும்.

16.4 குறுநாடகப் பிரதிகளை **செயலாளர்,உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,08 ஆம் மாடி, செத்சிறிபாய,பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும். ஆக்கங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“அரச ஊழியர்களுக்கிடையிலான குறுநாடக ஆக்கப் போட்டி 2017”** என குறிப்பிடுதல் வேண்டும்.

16.5 போட்டிகளுக்காக கைப்பிரதிகளை அனுப்பும் போது ஏ4 அளவிலான கடதாசியின் ஒரு பக்கத்தினை மாத்திரம் பயன்படுத்தி தட்டெழுத்தினாலோ அல்லது தெளிவான கையெழுத்தினாலோ சமர்ப்பித்தல் வேண்டும்.

16.6 நாடக இயக்குனர் நாடகத்தினை எழுதியவாரக அல்லாதிருப்பின் குறிபிட்ட நாடகத்தினை தயாரிப்பதற்கு எழுதியவரிடம் இருந்து நாடக இயக்குனருக்கு அதிகார கையளிப்பு கடிதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

| அரச ஊழியர்களுக்கிடையிலான குறுநாடக போட்டித் தொடர்– 2017<br>விண்ணப்பப் படிவம் | | |
|---|---|---|
| 01 | முழுப் பெயர் :-<br>……………………………………………………………………………………<br>(விண்ணப்பதாரி நாடகத்தின் இயக்குநராக இருத்தல் வேண்டும்) | |
| 02 | தனிப்பட்ட முகவரி | |
| 03 | தொலைபேசி இலக்கம் :-<br>கையடக்கத் தொ.பே.இல.: | |
| **நிறுவனம்சார் தகவல்கள்** | | |
| 04 | நிறுவனம் | |
| 05 | பதவி | |
| 06 | அலுவலக முகவரி | |
| 07 | அலுவலக தொலைபேசி இல | |
| **ஆக்கம் தொடர்பான விபரங்கள்** | | |
| 08 | நாடகத்தின் பெயர் | |
| 09 | மொழி மூலம் | சிங்களம் / தமிழ் |
| 10 | எழுத்தாளரின் பெயர் | |
| 11 | பிரதி விண்ணப்பதாரரினால் எழுதப்பட்டதா | ஆம் / இல்லை |
| 12 | (இல்லை எனில் மாத்திரம்)<br>எழுத்தாளரினால் விண்ணப்பதாரிக்கு அதிகாரம் அளித்தல் கடிதம் உள்ளதா :-<br>………………… | |

இவ் நாடக பிரதியானது தனது சுய ஆக்கம் என உறுதிப்படுத்துவதுடன் ஆலோசனை படிவத்தில் உள்ள போட்டி விதிமுறைகளுக்கு உட்பட்டு போட்டிகளில் பங்குபற்றுகின்றேன்.

திகதி கையொப்பம்

**<u>நிறுவன தலைவரின் விதந்துரைப்பு</u>**

இந் நிறுவனத்தில் சேவையாற்றும் திரு. /திருமதி / செல்வி ……………………………………… அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறுநாடகம் “அரச ஊழியர்களுக்கிடையிலான குறுநாடகப் போட்டி – 2017” போட்டிக்காக பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன்.

திகதி திணைக்கள தலைவரின் கையொப்பம்

அலுவலக முத்திரை